**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை - 600 025.**

**இளநிலைத் தமிழியல் - பட்டம் (B.A. TAMILOLOGY - Degree)**

**இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFF - LINE WRITTEN EXAMINATION)**

**நவம்பர் - திசம்பர் 2017**

**A011 காப்பிய இலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு - 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. கலைக்காப்பியம் என்றால் என்ன?
2. முத்தமிழ்க் காப்பியம் எது?
3. தமிழில் தோன்றியுள்ள இதிகாசக் காப்பியங்கள் எவை?
4. குண்டலகேசி எவ்வகை நூல்?
5. மணிமேகலையில் இடம்பெறும் தெய்வப் பாத்திரங்கள் இருவரை எழுதுக.
6. சேக்கிழாரின் இயற்பெயர் என்ன?
7. தில்லை நடராஜரைத் தரிசிக்க வேண்டித் தீயில் மூழ்கி எழுந்தவர் யார்?
8. ஒடிசி காப்பியத்தின் ஆசிரியர் யார்?
9. வில்லிபாரதம் எத்தனைப் பருவங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது?
10. பெருங்கதைக்கு வழங்கும் இரு வேறு பெயர்களைக் குறிப்பிடுக.
11. வீரமா முனிவரின் இயற்பெயர் யாது?
12. கண்ணதாசன் எழுதியுள்ள குறுங்காப்பியங்களைக் குறிப்பிடுக.
13. உமறுப்புலவரை ஆதரித்த வள்ளல்கள் யாவர்?
14. திருவாக்கு எனக் குறிக்கப்படுவது எது? அதன் பிரிவுகள் யாவை?
15. பூங்கொடி காப்பியத்தின் ஆசிரியர் யார்?

## பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.**

**(5x3=15)**

1. தண்டியலங்காரம் குறிப்பிடும் பெருங்காப்பிய இலக்கணம் யாது?
2. அமுத சுரபியின் சிறப்பினைக் கூறுக.
3. சூளாமணி - பெயர்க்காரணம் எழுதுக.
4. யசோதர காவியம் உணர்த்தும் தத்துவம் யாது?
5. கண்ணப்ப நாயனார் – சிறு குறிப்பு வரைக.
6. இராவணனின் தமிழ்ப்பற்று குறித்து எழுதுக.
7. வீரமா முனிவர் எழுதிய நூல்களைக் குறிப்பிடுக.
8. நுபுவத்துக் காண்டத்தின் சிறப்பினைக் கூறுக.

## பிரிவு - 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) சிலப்பதிகாரத்தின் இலக்கியச் சிறப்பினைச் சான்றுடன் விவரிக்க.

(அல்லது)

(ஆ) சீவகசிந்தாமனி உணர்த்தும் கலைகள் குறித்து கட்டுரை வரைக.

2. (அ) கம்பரின் கவித்திறனைத் தொகுத்தெழுதுக.

(அல்லது)

(ஆ) 20 –ஆம் நூற்றாண்டு காப்பியங்களின் இலக்கிய நயம் குறித்து எழுதுக.

3. (அ) சீறாப்புராணத்தின் இஸ்லாமியக் கோட்பாடுகள், கடமைகள், இறைத்தூதின் பெருமை ஆகியவை குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) முடியரசனின் பூங்கொடி காப்பியத்தை திறனாய்வு செய்க.

***